**OS.No.438/2019 P.W.1-பாஞ்சாலை 19.06.2026**

<u>1, 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. தாவா பி ஷெட்டியூல் 5வது அட்டவணை சொத்து முதல் பிரதிவாதி, 7வது பிரதிவாதிக்கு விற்றுவிட்டார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 7வது பிரதிவாதி தற்போது மேற்படி சொத்தில் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தாவா பி ஷெட்டியூல் 1வது அட்டவணை சொத்து கிழக்கு கடற்கரை சாலைக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 'பி' ஷெட்டியூல் 1 மற்றும் 5வது அட்டவணை சொத்துக்கள் எங்களுடைய குடும்ப சொத்து கிடையாது என்றால் சரியல்ல. 04.07.1965 அன்று எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் ராமகிருஷ்ணன் இறந்துபோய் விட்டார் என்று பிராதில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் சொன்னது போல வழக்கு பட்டிகை சொத்துக்கள் குடும்ப சொத்துக்கள் கிடையாது என்றால் சரியல்ல.

2. 'ஏ' ஷெட்டியூலில் 6 வீடுகள் உள்ளது, அதில் 3 வீடுகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது, 3 வீடுகள் காலியாக உள்ளது என்றால் பொய் சொல்கிறார். 6 வீடுகளில் யார், யார் வாடகைக்கு இருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை 'ஏ' ஷெட்டியூல் சொத்து மணியின் பெயரிலான தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. 'பி' ஷெட்டியூல் சொத்து விவசாய நிலம் என்றும், அதில் 25 முதல் 30 மூட்டை ஒரு போகத்திற்கு நெல் கிடைக்கும் என்று தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 'ஏ, பி' ஷெட்டியூல் சொத்துக்களுக்கு தனிப்பட்ட முறையில் மணியின் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பட்டா தீர விசாரித்து அவருக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 'பி' ஷெட்டியூல் 2வது அயிட்ட சொத்து 02.05.1985-ல் மகாலட்சுமி என்பவரிடமிருந்து முதல் பிரதிவாதி கிரயம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை மகாலட்சுமி 1971-ல் சிவானந்த சுப்ரமணி என்பவரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மகாலட்சுமி, தண்டபானி என்பவரிடம் மேற்படி சொத்தை அடமானம் வைத்திருந்தார், அந்த அடமானத்தை மீட்பதற்காக முதல் பிரதிவாதிக்கு தண்டபானி கிரயம் கொடுத்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எனவே அந்த சொத்தும் முதல் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றும், அதில் எனக்கு பாகம் கிடையாது என்றால் சரியல்ல.

3. குடும்பத்தில் மூத்தவர் என்பதால் அவர் பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பது தவறான தகவல் என்றால் சரியல்ல. மேற்படி கிரய பத்திரங்களை ரத்து செய்ய கேட்டு 3 வருட காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டும், நான் காலதாமதமாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 07.12.2019 அன்று முதல் பிரதிவாதியிடம் பாகம் கொடுக்க சொல்லி கேட்டதாக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சாயில்ல. பாகம் கேட்டு வழக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. 'ஏ' ஷெட்டியூல் அயிட்டம் 1, 2 சொத்துக்களை பொறுத்து ரூபாய் 3 லட்சம் பெற்றுக் கொண்டு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டேன் என்றால் நான் எழுதிக் கொடுக்கவில்லை. நான் விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டு என் மகன்களின் தூண்டுதலின் பேரில் அதை பதிவு செய்ய செல்லவில்லை என்றால் சரியல்ல. 01.12.2005 அன்று விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டு இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அட்டவணை 'சி, டி' ஆகிய சொத்துக்கள் மணியின் பெயரிலான தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல.

4. நான் வழக்கு பட்டிகை சொத்தில் கூட்டு குடும்பமாக எப்பொழுதும் அனுபவித்தது இல்லை, திருமணமாகி தனித்து சென்று விட்டேன் என்றால் சரியல்ல. அயிட்டம் 1, 8, 9 'சி' அட்டவணை சொத்துக்கள் 1வது பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அவர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அயிட்டம் 1, 2 'டி' அட்டவணை சொத்துக்களை 03.04.2006-ல் ஜீவரத்தினம்மாள் என்பவரிடமும், 14.06.2006-ல் சுவாமிநாதன் என்பவரிடமிருந்தும் முதல் பிரதிவாதி கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. டி அட்டவணை சொத்தும் முதல் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல, அதுவும் கூட்டு குடும்ப சொத்து தான்.

5. அக்டோபர் 2010-ல் பாகம் பிரித்து தர கேட்டதாக சொல்லியுள்ளதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி செய்த கிரயங்களை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுள்ளேன், அது தவறு அந்த கிரயங்கள் உண்மையாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. பல சொத்துக்கள் நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னதாகவே விற்கப்பட்டுவிட்டது, அதை ரத்து செய்ய கோரி நான் செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல.

6. ரூபாய் 3 லட்சம் பணம் பெற்றுக்கொண்டு பாகம் வேண்டாம் என்று விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டு பணம் பறிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எந்த பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை